www.tamilarangam.net

# கம்யூனிச இயக்கத்தில் ஆணாதிக்க மிச்சசொச்சம்

ஞாலன்

வெளியீடு:
முன்னணியாளர் பதிப்பகம்
சென்னை - 600 015.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## முன்னுரை:

ஆளும் வர்க்கங்களின் அரசியல், பொருளாதார கலாச்சார ரீதியான தாக்குதல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருப்பதால் உழைக்கும் மக்கள் சொல்லொணா துயரத்திற்கு ஆளாகி வருகின்றனர். இவற்றிற்கு எதிராகப் போராடுவதும், நமது உரிமையை, உடைமையை, உணர்வை மீட்டெடுப்பதும்தான் இன்று நம்முன்னுள்ள பிரதானப்பணி. இதை செய்ய வேண்டிய கடமை சாதி - மத பேதமின்றி, தேசிய இன வேறுபாடின்றி, ஆண் - பெண் பேதமின்றி, விவசாயி - தொழிலாளி - குட்டிமுதலாளி, நகரத்தார் - கிராமத்தார் எனப் பாகுபாடு இன்றி இந்திய உழைக்கும் மக்கள் அனைவருக்கும் உண்டு. ஆளும் வர்க்க கொடுமையிலிருந்து மக்களை மீட்டெடுக்க முன்னணிப் படையாக, ஒரு சரியான கம்யூனிஸ்டு கட்சியல்லாது வேறு எந்தக் கட்சியாலும் வழிகாட்டவோ, வழிநடத்தவோ முடியாது.

ஆனால், இந்திய கம்யூனிச இயக்கத்தைப் பொருத்தவரை கணிசமான காலம் இடது - வலது போலிக் கம்யூனிஸ்டுகளால் அவர்களின் துரோகத்தால் வீணாகிப் போனது. இன்றைய நிலையில் மா-லெ கட்சிக் குழுக்கள்தான் மக்களுக்கு நம்பிக்கை நட்சத்திரமாக - விடிவெள்ளியாக விளங்குகின்றன. ஆனால் இக்கட்சி, பல குழுக்களாக சிதறுண்டு இருப்பதால், சிறிய சக்திகளாக இருப்பதால் ஆளும் வர்க்கத்தின் தாக்குதலுக்கு எதிராக சகல அரங்கிலும் பலமிக்க - வீச்சான போரைத் தொடுக்க முடியாத நிலையிருக்கிறது. மேலும் இக்குழுக்களிடம் உள்ள குறுங்குழுவாதத் தவறுகள், பழைய சமூக கருத்துக்களின் தாக்கத்திற்குட்பட்ட சில தவறுகள் காரணமாக ஒருங்கிணைப்பும், வளர்ச்சியும் பாதிக்கப்படுகிறது.

ஆளும் வர்க்கத்தை வீழ்த்த வேண்டுமானால் ஒரு பாட்டாளி வர்க்கக் கட்சிக்கு தேவையான முதல் ஆயுதம்: சரியான - தெளிவான சித்தாந்தம், கோட்பாடு, கொள்கை, நெறிமுறைகளே. இப்பிரச்சினைகளில் மா-லெ குழுக்கள் மத்தியில் பல்வேறு நிலைப்பாடுகளும், பல்வேறு வகை தவறுகளும் நிலவுகின்றன. சமூகப் பிரச்சினைகள் அனைத்திலும் தெளிந்த கோட்டுபாடுகளை கொண்டிருக்க வேண்டியதன் அவசியத்தையும் இக்குழுக்கள் பாரதூரமாக உணராமல் இருக்கின்றன. இச்சிறுவெளியீட்டில் நான் பெண்விடுதலைப் பிரச்சினையை மட்டுமே எடுத்துக் கொண்டு இதற்கான கோட்பாட்டு அவசியத்தை வலியுறுத்தியும், நடைமுறை தவறுகள், நெறிமுறை தவறுகளைச் சுட்டிக்காட்டியும் உள்ளேன். முதல் பகுதியில் பெண் விடுதலை பிரச்சினையில் கோட்டுபாட்டு உருவாக்கம் தேவை பற்றியும், இரண்டாம் பகுதியில் மா-லெ குழுக்களிடையே நிலவுகிற பொதுவான கருத்து மற்றும் நடைமுறை தவறுகள் பற்றியும், மூன்றாவதில் தமிழகத்திலுள்ள ஒரு மா-லெ குழுவான மாநில அமைப்பு கமிட்டி வகுத்துள்ள நெறிமுறைகளில், கருத்துகளில் தவறுகள் இருப்பது பற்றியும் விளக்கியுள்ளேன்.

இரண்டாவது பகுதியில் சுட்டிக்காட்டியுள்ள தவறுகள், மா-லெ குழுக்களிடம் வெவ்வேறு பிரச்சினைகளில் பல்வேறு அளவுகளில் பொதுவாக இருப்பதை உணர்ந்ததன் விளைவாக வந்த விமர்சனமாகும். மூன்றாவது பகுதியில் குறிப்பாக ஒரு குழு மீது வைத்துள்ள விமர்சனம் நேரடி அனுபவத்திலிருந்து பெறப்பட்டதாகும். இக்குழுவினர், ஆணாதிக்க மிச்ச சொச்சம், தனிபட்ட நபர்கள் சிலரிடம் இருப்பதை ஒத்துக் கொள்கிறார்களே ஒழிய, தலைமையளவில் இக்குறைபாடு இருப்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் இங்கு நான் முன்வைத்துள்ளவையே இதற்கு தக்க ஆதாரங்களை வழங்கப் போதுமானவை என்று கருதுகிறேன். மா-லெ குழுக்களிடையே உள்ள இக்குறைபாடுகள் களையப்பட வேண்டும் என்று விரும்புகிற அதேசமயம் இதற்கு முன்தேவையாக உள்ள கோட்பாட்டு உருவாக்கத்தையே மேலதிகமாக வலியுறுத்த விரும்புகிறேன்.

இத்தகைய கோட்பாட்டு உருவாக்கத்திற்காக, நான் வைத்துள்ள இச்சிறு வெளியீடு பயனளிக்கும் என நம்புகிறேன். வாசகர்களிடமிருந்து இக்கருத்துக்கள் மீதான விமர்சனத்தை எதிர்பார்த்து காத்திருக்கிறேன். இச்சிறு வெளியீடு வருவதற்கு ஒத்துழைத்த நண்பர்கள், தோழர்கள், அச்சகத்தார், பதிப்பகத்தார், ஓவியர் அனைவருக்கும் நன்றியை உரித்தாக்குகிறேன்.

தோழமையுடன்

ஞாலன்

6-8-96

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 1

மனிதகுல வரலாற்றில் முதல்முதல் தோன்றிய வேலைப் பிரிவினை ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே ஏற்பட்டதுதான். முதலாவது தோன்றிய 'வர்க்கப் பிரிவினையும்' இதுதான்,

> "குழந்தை பெறுவதற்காக ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே இருந்த வேலைப் பிரிவினைதான் முதல் வேலைப் பிரிவினையாகும் இன்று இத்துடன் நான் பின்வருமாறு சேர்க்க முடியும். வரலாற்றில் தோன்றுகிற முதல் வர்க்க விரோதம் ஒருதார மணத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே விரோதம் வளர்வதோடு ஒன்றுபடுகிறது; முதல் வர்க்க ஒடுக்குமுறையோ பெண்பாலை ஆண்பால் ஒடுக்கும் ஒடுக்குமுறையோடு ஒன்றுபடுகிறது." (குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம், பக்.105) என்கிறார் ஏங்கெல்ஸ்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடு, சமூகத்திலுள்ள பிற முக்கிய முரண்பாடுகள் மறைந்தபின்தான் கடைசியாக முற்றிலும் மறைந்தொழியும். ஆனால் இம் முரண்பாட்டை தீர்ப்பதற்கான போராட்டம் முதலாளித்துவ சமூகத்தில் உக்கிரமாக எழுந்துவிட்டது. முதலாளித்துவ உற்பத்திக்கு முந்தைய சமூக உற்பத்தி முறையில் நடந்த பெண்களது போராட்டங்கள் பக்தி, சமயம், அரசவைக்குள்ளேயே நடந்தவைகளாகவும், அழுகை-கோபம்-கிண்டல்-சாடல் போன்ற வடிவங்களில் உணர்ச்சிகளை மட்டுமே கொட்டுபவைகளாகவும் முதிர்ச்சியற்று இருந்தன. ஆனால் முதலாளித்துவ உற்பத்தியில் பெண்களின் உரிமைக்கானப் போராட்டங்கள் ஒப்பீட்டளவில் முதிர்ச்சியடைந்துள்ளன.

முதலாளித்துவ சமூகம் முந்தைய ஆண்டான் அடிமை, நிலப்பிரபுத்துவ சமூகங்களின் அனைத்து பிற்போக்குகளையும் தூக்கியெறிந்த பின்னரே தன்னை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. இதனால், பெண்கள் மீதிருந்த சில கொடுமைகளையும் தூக்கியெறிந்தது. உற்பத்தி சக்திகளின் தேவையை ஒட்டி சுய ஆதாயத்திற்காக பெண்களையும் உற்பத்தியில் ஈடுபடுத்தியது. இதற்காக பெண்களுக்கும் கல்வி போன்ற பிற வாய்ப்புகள் திறந்துவிடப்பட்டன. பெண்களின் நலன்களுக்கான சட்டங்களும், சலுகைகளும், சொத்து மற்றும் விவாகரத்து உரிமைகளும் முதலாளித்துவ சமூகத்தில் உருவாகின. ஆனால் இவையெல்லாம் போராடியே பெறப்பட்டன.

இருந்தாலும் முதலாளித்துவச் சமூகம் பெண்களுக்கு இழைக்கின்ற கொடுமை முந்தைய சமூகத்தைக் காட்டிலும் கொடுமையானதே. முதலாளித்துவம், நிலப்பிரபுத்துவ சமூகத்தில் நிலவிய தனிப்பட்ட மற்றும் பொதுவான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விபச்சாரத்தைப் பூதாகரமாக்கி தொழில்முறை அந்தஸ்த்தும் கொடுத்துள்ளது. ஆபாச – சீரழிவு கலாச்சாரங்களைப் பரப்பி பாலியல் வக்கிரங்களை – 'கற்பழிப்பு', கிண்டல், சீண்டல் போன்றவற்றை – நிறுவன மயமாக்கிவிட்டது. ஆடம்பர மோகத்தைத் தூண்டி வரதட்சணைக் கொடுமையை பன்மடங்காக்கியுள்ளது. ஒழுக்கக் கேடு, வேட்டை நோயிலிருந்து எய்ட்ஸ் நோயாக முன்னேறியுள்ளது.

ஆண்டான் அடிமை, நிலப்பிரபுத்துவ சமூகங்களில் ஆணாதிக்க கருத்துக்கள் சாதி, மதம் மற்றும் அரசு நிறுவனங்கள் மூலம் கோலோச்சின. முதலாளித்துவ சமூகத்தில் ஆணாதிக்கக் கருத்துக்கள் கலாச்சார நிறுவனங்கள் மூலம் கோலோச்சுகின்றன. பெண்களுக்கு எதிராக உள்ள சில சாதி, மத பழக்க வழக்கங்களை ஒழித்தும், சட்டத்தில் உள்ள பால் வேறுபாடுகளைக் குறைத்தும் சீர்திருத்தங்களை செய்கிற முதலாளித்துவ அரசு, அதன் இழப்பை கலாச்சார நிறுவனங்கள் மூலம் ஆபாச – சீரழிவுகளை எல்லையின்றி கட்டவிழ்த்து விடுவதன் மூலம் ஈடுசெய்து கொள்கிறது. அதாவது பெண்கள் மீதான அடக்குமுறையின் வடிவம்தான் மாற்றப்பட்டுள்ளது.

முதலாளித்துவம் நிலப்பிரபுவத்துவத்தைத் தூக்கியெறிந்த அதே சமயம், தனக்கு சவக்குழி தோண்டக்கூடிய தொழிலாளி வர்க்கத்தையும் தோற்றுவித்துக் கொண்டதுபோல், ஆணாதிக்க சமூக கட்டமைப்பின் இறுதிக்கட்டமான முதலாளித்துவம் தனக்கு சவக்குழி தோண்டக் கூடிய பெண் தொழிலாளிகளையும் தோற்றுவித்துக் கொண்டது. அதாவது தொழிலாளி வர்க்கத்திற்கு பலம் சேர்த்தது. ஆணாதிக்கத்தை ஏந்தி வருகிற முதலாளிக்கு மட்டுமல்ல தொழிலாளிக்கும் அச்சத்தை தரும் வகையில் பெண்ணுரிமையாளர்கள் தோற்றம் பெற்றனர்.

நகரங்களில் படித்த குட்டி முதலாளித்துவ மற்றும் தொழிலாளி பிரிவு பெண்கள், குடும்பத்தில் ஆணாதிக்கத்திற்கு எதிரான கலகத்தையும் சமுதாயத்தில் போராட்டத்தையும் தொடுத்தார்கள் / தொடுத்து வருகிறார்கள். ஆனால் இவர்களில் பெரும்பாலோர் முதலாளித்துவ பெண்ணிலைவாதத்தில் சிக்கியுள்ளனர். நிலப்பிரபுத்துவ வகைப்பட்ட பெண்கள் மீதான கொடுமைகளை எதிர்ப்பவர்கள் முதலாளித்துவக் கண்ணோட்டத்தில் கால்பதித்து நிற்கிறார்கள். முதலாளித்துவ வகைப்பட்ட பெண்கள் மீதான கொடுமைகளையும் சேர்த்து எதிர்ப்பவர்கள் ஏகாதிபத்திய சீரழிவுகளில் காலூன்றி நிற்கிறார்கள். இவர்கள் சோசலிச சமூகத்திலும் ஆணாதிக்கக் கொடுமைகள் இருந்ததாகத் தூற்றிக் கொண்டுள்ளனர்.

முதலாளித்துவத்தை வீழ்த்திய சோசலிச சமுதாயமோ, இதுவரை நிலவிய வர்க்க சமுதாயங்களை ஒழித்ததுடன் அதனுள் அடங்கிய ஆணாதிக்க சமூக கட்டமைப்பையும் ஒழித்து, பெண்களை அனைத்து பிற்போக்கு மற்றும் சீரழிவு கொடுமைகளிலிருந்து விடுவித்தது. பெண்களை பெருவாரியாக சமூக உற்பத்தியில் ஈடுபடுத்தியது மட்டுமல்லாமல் அவர்கள் செய்து கொண்டிருந்த சிறு அடிமை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உழைப்புகளையும் சமூக உடமையாக்கி சமூக அந்தஸ்த்து கொடுத்தது. சமையல், சலவை, குழந்தை பராமரிப்பு போன்றவற்றை சமூக உற்பத்தியுடன் பிணைத்தது. முதலாளித்துவ சிறு கும்பலின் லாப நோக்கு இங்கு இல்லாததால் அதே பெண்களை சமூகத்தில் ஒரு விலை பொருளாகவும், போகப் பொருளாகவும் ஆக்கி தமது அராஜக உற்பத்திக்கான புறவய சமூக சீரழிவை - கலாச்சாரத்தை பரப்பும் அவசியம் சோசலிச சமுதாயத்தில் எழவில்லை. ஆபாச - சீரழிவுகளும், ஒழுக்கக் கேடுகளும் வியக்கும் வண்ணம் விரைவாக ஒழிந்தன. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ரஷ்ய - சீன திரிபுவாதிகள் கைவிட்டதன் விளைவாகவே மீண்டும் அனைத்துச் சீரழிவுகளும், ஒழுக்கக் கேடுகளும் தலைதூக்கியுள்ளனவே அன்றி வேறில்லை.

சோசலிச அரசு நிறுவப்பட்ட பின்னரும் பழைய வர்க்கங்களும், பிற்போக்கு சக்திகளும் உயிர்த்தெழுந்து விடாமல் தடுப்பதற்காக வர்க்கப் போராட்டத்தை தொடரவே வேண்டியிருந்தது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஏகாதிபத்திய சக்திகளின் சீர்குலைவு - சதிகளுக்கு எதிரானப் போராட்டம் இரு நாட்டிலும் சோசலிச அரசு நீடித்தவரை நிகழ்ச்சி நிரலில் இருந்தது. இதனால் ஆண்-பெண் சமத்துவம் மற்றும் பெண்கள் மீதான கொடுமைகளை ஒழிப்பதற்கு முழுக்கவனம் செலுத்த இயலாத புறவய நிலைமையே நீடித்தது. இருந்தாலும், மூளையுழைப்புக்கும், உடலுழைப்புக்கும் மற்றும் தொழிலாளிக்கும் விவசாயிக்கும் இடையில் இருந்த முரண்பாட்டை தீர்ப்பதைப் போல், ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் இருந்த முரண்பாட்டை தீர்ப்பதில் அக்கறை காட்டினர். முழுமுற்றான சமத்துவத்தை நிலைநாட்டுவதிலோ, கலாச்சார ரீதியான ஆண்-பெண் ஏற்றத்தாழ்வுகளை ஒழிப்பதிலோ, பெண் விடுதலைக்கான கோட்பாடுகளை உருவாக்குவதிலோ சோசலிச காலகட்டத்தில் இயலாமல் போய்விட்டது மட்டுமே குறைபாடு. இதுகூட காலமும், புறவய தேவையும் இல்லாமல் ஏற்பட்ட இயல்பான ஒன்று.

**ஆண் பெண்ணுக்கிடையே நிலவும் நேச முரண்பாடு, வர்க்க சமுதாயங்களில் ஆணாதிக்க சமூக கட்டமைப்பால் பகைமையாகியும் / பகைமையாக்கவும் படுகிறது.**

17ம் நூற்றாண்டின் மத்தியிலேயே இங்கிலாந்தில் பெண் தொழிலாளர்களின் போராட்டங்கள் தொடங்கிவிட்டன. சிறுசிறு கோரிக்கைகளை வைத்து பெண்கள் இயக்கம் முன்னேறினாலும் 18ம் நூற்றாண்டில்தான் பெண் சிந்தனையாளர்கள் தோன்றி பல கோணங்களில் பெண்விடுதலைக்கான கருத்துக்களை முன்வைத்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முதலாளித்துவத் தளத்திலிருந்து பெண்ணுரிமை கருத்துக்களை முன்வைத்தது பிரஞ்சு புரட்சி (1789) வரையிலும் அதற்குப் பின்னும்கூட தொடர்ந்தது. 19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சோசலிச தளத்திலிருந்து பெண்விடுதலை கருத்துக்களை முன்வைத்து போராட்டம் தொடங்கியது.

மார்க்ஸ், ஏங்கெல்ஸ்-ன் கம்யூனிஸ்டு கட்சி அறிக்கை (1848), மார்க்ஸ்-ன் மூலதனம் பகுதி 1 (1867) மற்றும் ஏங்கெல்ஸ்-ன் குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் (1884) ஆகியவற்றில் உள்ள பெண் விடுதலை தொடர்பான கருத்துக்கள், சோசலிச பெண் சிந்தனையாளர்களுக்கு சிறந்த ஆயுதங்களாகின. 19ம் நூற்றாண்டின் இறுதியில், உலகளவில் சோசலிச பெண் சிந்தனையாளர்களின் ஒருங்கிணைப்பும், அமைப்புகளும் தோன்றின.

ஜெர்மன் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த கிளாரா செட்கின் சோசலிச பெண் சிந்தனையாளர்களின் ஒருங்கிணைப்புக்குப் பாடுபட்டார். மார்க்ஸ்-ன் மகள் லாரா மற்றும் ரஷ்ய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த குழந்தாய் முதலானவர்களும் கிளாரா செட்கினுடன் இணைந்து 1907ல் சர்வதேச சோசலிச பெண்களின் முதல் மாநாட்டை ஜெர்மனியில் ஸ்டட்கார்ட்டில் நடத்தினர். 1910ல் சர்வதேச சோசலிச பெண்களின் இரண்டாவது மாநாடு டென்மார்க் - கோபன் ஹேகனில் நடந்தது. இம்மாநாடுகளின் விளைவாகத்தான் மார்ச் 8ந் தேதி, உழைக்கும் பெண்களின் தினமாக அறிவிக்கப்பட்டது. பெண் தொழிலாளர்களின் போராட்டங்கள் பல நாடுகளில் நடத்தப்பட்டன. இக்காலக்கட்டத்தில் முதலாளித்துவ பெண் நிலைவாதிகளின் கருத்துக்கள் அமுங்கிப் போயின. பெண்கள் சோசலிச சிந்தனையாளர்களின் பின்னே பெருவாரியாகத் திரண்டனர்.

பின்னர் முதலாம் உலகப்போர், ரஷ்யப் புரட்சி போன்றவைகளின் காரணமாகவும், அதற்குப் பின் நடந்த சோவியத் ரஷ்யாவின் உள், வெளி போர்களின் காரணமாகவும் சர்வதேச சோசலிச பெண்களின் ஒருங்கிணைப்பு இல்லாமல் போனது. இந்த சர்வதேச அமைப்பு நாளடைவில் முதலாளித்துவ பெண்ணிலைவாதிகளின் கைகளுக்கு மாறிவிட்டது. ரஷ்யா மற்றும் சீனாவில் திரிபுவாதிகள் ஆட்சிக்கு வந்துவிடவே சோசலிச பெண் சிந்தனையாளர்கள், முதலாளித்துவ பெண்ணிலைவாதிகளுக்கு எதிராக தொடுத்த போராட்டத்திலும் தோய்வு ஏற்பட்டது. இன்று சர்வதேச அளவில் முதலாளித்துவ பெண்ணிலைவாதிகள் மற்றும் திரிபுவாத சோசலிஸ்டுகளின் கருத்துக்களே ஆதிக்கம் செலுத்துகின்றன.

இங்கு நாம் ஒன்றை கவனிக்கலாம், முதலாளித்துவ உற்பத்தி வளர வளர ஏற்பட்ட பொருளாதார சமுதாய மாற்றங்களின் விளைவாக தொழிலாளி வர்க்கம் மற்றும் அதன் சித்தாந்தப் போராட்டம் எழுச்சிப்பெற்று வளர்ந்தது போலவே, பெண்விடுதலைக் கருத்துக்களும், போராட்டமும் கூடவே எழுந்து வளர்ந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வந்துள்ளது. தொழிலாளி வர்க்கப் போராட்டத்தில் ஒன்றாகவும் அதே சமயம் தனித்தும் தன்னை அடையாளங்காட்டிக் கொண்டே வந்துள்ளது. ஆனால், சில படிகள் பின்தங்கியே முன்னேறி வந்துள்ளது.

எப்பொழுதும் முதலாளித்துவ சமூகத்தில் முக்கியமான முரண்பாடாக தொழிலாளி, முதலாளிக்கிடையேயான பிரச்சினையும் அதற்கான சித்தாந்த தேவையும்தான் புறவய நிலைமையில் எழுந்து நிற்கும். இதனுடன் பெண் விடுதலைப் பிரச்சினையும் அதற்கான சித்தாந்த கோட்பாட்டு தேவையும் கூடவே எழுந்தாலும் அதன் தேவை அவ்வளவாக இல்லை. தேசிய இன ஒடுக்கு முறையால் தேசிய இனப் பிரச்சினையும் அதற்கான் கோட்பாட்டு தேவையும் எழுந்த அளவுகூட பெண் விடுதலைப் பிரச்சினை முன் எழவில்லை. ஏனெனில் இயல்பாக அது அதன் தன்மையாகவும் இருந்தது.

முதலாளிக்கும் தொழிலாளிக்கும், பண்ணையாருக்கும் விவசாயிக்கும் இடையே நிலவும் முரண்பாடு இயல்பிலேயே பகைமையானது. ஆனால் ஆண், பெண்ணுக்கிடையே நிலவும் முரண்பாடு இயல்பிலேயே பகைமையற்றது, நேச முரண்பாடு. ஆனால், இம் முரண்பாடு வர்க்க சமுதாயங்களில் ஆணாதிக்க சமூக கட்டமைப்பால் பகைமையாகியும் நிற்கிறது / பகைமையாக்கவும் படுகிறது. ஆளும் வர்க்கங்களின் ஆணாதிக்க நிறுவனங்களுக்கும் உழைக்கும் பெண்களுக்கும் இடையே பகைமையான முரண்பாடும், குடும்ப ரீதியாக தனிப்பட்ட முறையில் தனிப்பட்ட பிரச்சினைகளில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே பகைமையான முரண்பாடும் (பல விவாகரத்து பிரச்சினைகளில்) நிலவுகிறது.

இது ஏங்கெல்ஸ்-ன் கூற்று:

> "தனிபட்ட குடும்பத்தில், அதன் வரலாற்று ரீதியான தோற்றத்தை உண்மையாகப் பிரதிபலிக்கிற சமயங்களிலும், ஆணின் தனியாதிக்கத்தின் விளைவாக ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்படும் சச்சரவைத் தெளிவாக வெளிப்படுத்தும் சமயங்களிலும் நமக்கு ஒரு சிறு ஓவியம் கிடைக்கிறது. அதில் சமுதாயத்திலுள்ள விரோதங்களும் முரண்பாடுகளும் தெரிகின்றன, நாகரிகம் தொடங்கிய காலத்திலிருந்து வர்க்கங்களாகப் பிரிந்த சமுதாயம் அந்த விரோதங்களிலும் முரண்பாடுகளிலும் இயங்கி வருகிறது, அவற்றை அதனால் தீர்க்கவும் முடியவில்லை, தோற்கடிக்கவும் முடியவில்லை. (குத.அ.ஆ.தோ. பக் 108)

நேச முரண்பாடு சரியாக கையாளப்படாவிடில் பகைமையானதாக மாறிவிடும். உதாரணங்கள் வரலாற்றில் நிறையவே உண்டு. ஆளும் வர்க்கங்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமது சுயநலனுக்காக விவசாயிக்கும், தொழிலாளிக்கும் மற்றும் நகரத்தாருக்கும் கிராமத்தாருக்கும் பகைமையைத் தூண்டி ஆதாயமடைந்துள்ளன. அதாவது வர்க்க பேத சமுதாயங்களில் ஆண்-பெண் முரண்பாடு பகைமையானதாக இருப்பது செயற்கையாக ஏற்பட்ட ஒன்று. வர்க்கங்களற்ற சமுதாயம் தோன்றும் பொழுது மட்டுமே இந்நேச முரண்பாடு வளராமல் படிப்படியாக மறைந்தொழியும்.

எனவே வர்க்கங்களற்ற சமுதாயம் அமைக்கும் பணியே முதன்மையாக இருப்பதால், அதற்கான சித்தாந்த - கோட்பாட்டு பிரச்சினைகளுக்கு மார்க்சிய ஆசான்கள் பங்களிப்பு செய்தனர். அதே சமயம் வர்க்கப் போராட்டத்திற்கு 'இடையூறாக' வருகிற தேசிய இனப்பிரச்சினை, பெண் விடுதலைப் பிரச்சினை போன்றவற்றிற்கும் அத்தன்மைக்கேற்ப, தேவைக்கேற்ப பங்களிப்புகளைச் செய்யத் தவறவில்லை. இந்த வகையில் தேசிய இனப் பிரச்சினைக்கு மார்க்சிய ஆசான்கள் வகுத்தளித்த கோட்பாடு - வழிகாட்டுதல்களைக் காட்டிலும் பெண்விடுதலைப் பிரச்சினைக்கு வகுத்தளித்த வழிகாட்டல்கள் மிகமிகக் குறைவே. பெண் விடுதலைக்கான கோட்பாட்டு உருவாக்கம் ஆரம்பநிலை கருவடிவில்தான் இருந்தது எனக் குறிப்பிடலாம்.

பெண் விடுதலை பிரச்சினையில் வரலாற்றுப் பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தை ஏங்கெல்ஸ்-ன் மகத்தான நூலான "குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்" நல்கியது. மார்க்ஸ், ஏங்கெல்ஸ்-ன் கம்யூனிஸ்டு கட்சி அறிக்கையும், லெனின்-ஸ்டாலின்-மாவோ-வின் கட்டுரைகளில் சில சிறு பகுதிகளும், பேச்சுகளும், கடிதங்களும் கம்யூனிசத்தின் மீது முதலாளித்துவம் சித்தரித்த கருத்துக்களை தோலுரித்தன. கம்யூனிசத்தில் பெண்கள் நிலைமை, குடும்பம், ஆண்-பெண் உறவு எப்படி இருக்கும் என்று பொதுவாக இவை சுட்டிக்காட்டியுள்ளன. மூலதனம் பகுதி 1-ல் மார்க்ஸ், பெண்கள் மீதான முதலாளித்துவ, உழைப்புச் சுரண்டலை படம் பிடித்துக் காட்டுகிறார். மற்றபடி கிளாரா செட்கின், அலக்சாண்ட்ரா குழந்தாய் போன்றவர்கள் முதலாளித்துவ பெண்ணிலை வாதிகளை, அம்பலப்படுத்திக் காட்டினர். அப்பொழுது முதலாளித்துவ பெண்ணிலைவாதிகள், கல்வி-வேலைவாய்ப்புகளில் சமஉரிமை அல்லது சலுகை, அரசியலில் வாக்குரிமை, நிலப்பிரபுத்துவ பழக்க வழக்கங்கள் - மதச் சடங்குகளுக்கு எதிரானப் போராட்டங்கள், சுதந்திர பால் உறவு போன்ற பிரச்சினைகளில் மட்டுமே மையம் கொண்டு விவாதித்ததால் சோசலிச் பெண்ணிலைவாதிகளின் கருத்துப் போராட்டங்களும் இந்த வரம்புக்குள்ளேயே நின்றன. ஆனால், முதலாளித்துவ பெண்ணிலைவாதத்திற்கும், சோசலிச பெண்விடுதலைக் கருத்திற்கும் தெளிவான எல்லைக்கோடு பிரித்துக் காட்டினர்.

1920ல் கிரம்ளினில் கிளாரா செட்கினிடம் லெனின் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

"ஒரு தெளிவான கோட்பாட்டு அடிப்படையில் நாம் கட்டாயம்

www.tamilarangam.net



சக்திவாய்ந்த சர்வதேச பெண்கள் இயக்கத்தை உருவாக்க வேண்டும். மார்க்சிய சிந்தாந்தம் இல்லாமல் எந்த நல்ல செயல்பாடும் இல்லை என்பது தெளிவு. பெண் விடுதலை பிரச்சினையில் தெளிவான கொள்கை, கம்யூனிஸ்டுகளாகிய நமக்குத் தேவை. நமக்கும் பிற கட்சிகளுக்கும் இடையே துள்ளியமான வேறுபாடு இருக்க வேண்டும். துரதிஷ்டவசமாக, எமது இரண்டாவது உலக காங்கிரசில் இப்பிரச்சினை தொடர்பாக பேசப்படவில்லை. இப்பிரச்சினை பேசுவதற்காக முன்வந்தது, ஆனால் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. இப்பிரச்சினை இன்னமும் தீர்வு காணப்பட வேண்டிய, கோட்பாடுகள், வழிமுறைகள் வகுக்கப்படவேண்டிய ஒன்றாகவே இருக்கிறது."

1920களில் மட்டுமல்ல, 1990களிலும் இதுதான் நிலைமை. இன்னும் சொன்னால் முதலாளித்துவ உற்பத்தி, பெண்களை குடும்பத்திற்கு வெளியே கொண்டுவர வர பெண் விடுதலைக் கருத்துக்கான போராட்டங்கள் சகல அரங்குகளிலும் எழுந்து நிற்கின்றன. ரஷ்ய, சீன சோசலிச அரசுகளில் நடந்த பெண்களுக்கான முன்னேற்றப் பணிகளை முதலாளித்துவ பெண்ணிலைவாதிகள் கேள்விக்குள்ளாக்கியிருக்கும் காலக்கட்டமும் இது. முதலாளித்துவத்தின் சீரழிந்த இடைக்கட்டமான இந்த ஏகாதிபத்திய சகாப்தத்தில் பெண்விடுதலை தொடர்பாக பல்வேறு திரிபுவாத - பலவண்ண கோட்பாடுகள் உருவாகியுள்ளன. மேலும், கண்கூடாக முதலாளித்துவ பெண்ணிலைவாதிகளின் ஒழுக்கக் கேடுகளும், ஏகாதிபத்தியத்தின் சீரழிவுகளும் அழுகி நாறுகின்றன. இவற்றைத் தோலுரிக்க வேண்டியதும், மாற்று கோட்பாடுகளை - வழிமுறைகளை உருவாக்க வேண்டியதும், பல பெண்கள் அமைப்புகள், குட்டி முதலாளித்துவ பெண்ணியலாளர்கள் எழுப்பியுள்ள பல கேள்விகளுக்கு பதிலுரைக்க வேண்டியதுமான தேவை அதிகமாகவே உள்ளது. இப்புறநிலை தேவையை கணக்கிலெடுத்து இன்றைய கம்யூனிஸ்டுகள் பெண்விடுதலைக்கான கோட்பாட்டு பங்களிப்புகளைச் செய்யவேண்டியுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 2

இந்தியாவைப் பொருத்தவரை இது நிலப்பிரபுத்துவத்திலிருந்து முதலாளித்துவத்திற்கு மாறும் இடைக்கட்டும். முதலாளித்துவம் என்கிறபோது அது ஏகாதிபத்திய பொருளாதார கட்டமைப்பாகும்.

எனவே, இந்தியாவிலிருக்கும் நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறை மற்றும் ஏகாதிபத்திய உற்பத்தி முறைக்கு ஏற்ப இவ்விரு வகைப்பட்ட ஆணாதிக்க கட்டமைப்பு - ஆணாதிக்கக் கொடுமைகள் இங்கு நிலவுகின்றன. ஏகாதிபத்திய உற்பத்தியால் நிலப்பிரபுத்துவ கொடுமைகள் சிலவற்றிலிருந்து விடுபட்ட நிலைமையைக் காட்டிலும் இந்தியப் பெண்களுக்கு, நிலப்பிரபுத்துவத்துடன் ஏகாதிபத்திய கொடுமைகளும் கூடி சுமை இரண்டு மடங்காகியுள்ளது. இந்தியாவின் கிராமப்புறங்களில் நிலப்பிரபுத்துவ வகைப்பட்ட ஆணாதிக்க கொடுமைகளும், நகரங்களில் ஏகாதிபத்திய வகைப்பட்ட ஆணாதிக்க கொடுமைகளும் மிகுந்து இருந்தாலும் இந்திய உழைக்கும் பெண்கள் இருவகை எதிரிகளையும் போராடி அழிக்க வேண்டியுள்ளது.

ஒரு முதலாளித்துவச் சமூகத்திலுள்ள பெண் விடுதலைக்கான தளமும், ஒரு அரைக்காலனிய - அரை நிலப்பிரபுத்துவ சமூகத்திலுள்ள பெண் விடுதலைக்கான தளமும் வேறுபட்டு இருக்கிறது. இந்தியா போன்ற நாடுகளில் நிலப்பிரபுத்துவ உற்பத்தியே தீர்மானகரமான பாத்திரமாற்றுவதால் முதலாளித்துவ - ஏகாதிபத்திய நாடுகளைப்போல் நிலப்பிரபுத்துவ - ஆணாதிக்க கொடுமைகள் மிச்ச சொச்சங்களாக நீடிக்காமல் தீர்மானகரமான ஒன்றாகவே உள்ளன. எனவே மேற்கண்டவற்றிலிருந்து நாம் தெளிவான முடிவுக்கு வரலாம். இந்தியாவின் அரைக்காலனிய - அரை நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறை மாற்றத்திற்கான அரசியல் பொருளாதாரப் போராட்டத்திலிருந்து இந்தியப் பெண்களின் போராட்டத்தை பிரித்து எடுக்க முடியாது. பெண் விடுதலைப் போராட்டம் இயல்பிலேயே பாட்டாளிவர்க்க விடுதலைக்கானப் போராட்டத்துடன் இணைந்தது.

அதேபோல் ஆணாதிக்கம் என்பது உற்பத்தி முறையுடன் தொடர்புடையது என்பதை நன்குணரலாம். ஆணாதிக்க ஒடுக்குமுறை மதம், தேசியம் போன்று வெறும் கருத்துக்கள், நிறுவனங்களோடு (மேல் கட்டுமானத்துடன்) மட்டும் தொடர்புடையது அல்ல. சாதி ஒடுக்குமுறையைப் போல் உற்பத்தி முறையுடனும் (அடித்தளத்துடனும்) தொடர்புடையது. இந்தியாவைப் பொருத்தவரை வர்க்க ஒடுக்குமுறை, சாதி ஒடுக்குமுறை, ஆணாதிக்க ஒடுக்குமுறை ஆகிய மூன்றும் அடித்தளத்தில் உள்ள பிரச்சினைகள்.

ஒரு சமுதாயத்திற்கு தேவையான பௌதீகப் பொருட்களை மனிதர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எப்படி, எந்த முறையில், என்ன கருவிகளைக் கொண்டு உற்பத்தி செய்கிறார்கள், உற்பத்தி செய்த பொருட்களை எப்படி விநியோகித்துக் கொள்கிறார்கள். இதனடிப்படையில் அவர்களிடையே அமைந்துள்ள உறவுகள் இவையனைத்தும் சேர்ந்ததே உற்பத்தி முறையாகும். இன்ன சாதிக்கு இன்ன தொழில், இன்ன சாதிக்கு இன்ன சமூக அந்தஸ்த்து, இன்ன பழக்க வழக்கம் என்றிருக்கிற சாதி ஒடுக்குமுறையைப் போல் ஆணுக்கும் பெண்ணுக்கும் இன்ன இன்ன தொழில், இன்ன இன்ன சமூக பாத்திரம்- பழக்க வழக்கம் என்ற அடிப்படையில்தான் ஆணாதிக்க ஒடுக்குமுறை நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையில் உள்ளது.

மேற்கண்ட இரு விஷயங்களை - பெண்கள் விடுதலை பாட்டாளி வர்க்க விடுதலையுடன் இணைந்தது, ஆணாதிக்க ஒடுக்குமுறை உற்பத்தி முறையுடன் தொடர்புடையது - தெளிவாகப் புரிந்து கொள்ளாமல் இரு வேறு பிரிவினர் தவறுகளை இழைக்கிறார்கள். முதல் வகை தவறை முதலாளித்துவ பெண்ணிலைவாதிகளும், இரண்டாவது வகை தவறை கம்யூனிஸ்டுகளும் செய்கிறார்கள்.

பெண் விடுதலைக்கான கோட்பாட்டுத் தேவையை இந்திய கம்யூனிஸ்டுகள் உணராமலிருப்பது, உணர்ந்திருந்தாலும் மெத்தனம் காட்டுவது போன்ற நடைமுறைதான் உள்ளது. பெண் விடுதலைப் பிரச்சினை வர்க்கப் போராட்டத்திற்குட் பட்டது என்கிற காரணத்திற்காக அதன் கோட்பாட்டு தேவையை மறுக்க வேண்டுமா என்ன? இப்பிரச்சினையில் பருண்மையாகவும் ஆழமாகவும் போக மறுக்கும் போக்கும், பாட்டாளி வர்க்க வெற்றிக்குப்பின் பார்த்துக் கொள்ள வேண்டிய விவகாரம் என அலட்சியப்படுத்தும் போக்கும் இந்திய கம்யூனிஸ்டுகள் மத்தியில் நிலவுகிறது. பாட்டாளி வர்க்கப் போராட்டமே பிரதானமானது. இதற்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கிற அதே சமயம் அடுத்த நிலையிலுள்ள பிரச்சினைகளுக்கும் உரிய முக்கியத்துவம் கொடுக்கத் தவறுகிறார்கள்.

> **ஆணாதிக்க ஒடுக்குமுறை மதம், தேசியம் போன்று வெறும் கருத்துக்கள், நிறுவனங்களோடு (மேல் கட்டுமானத்துடன்) மட்டும் தொடர்புடையது அல்ல. சாதி ஒடுக்குமுறையைப் போல் உற்பத்தி முறையுடனும் (அடித்தளத்துடனும்) தொடர்புடையது.**

தேசிய சுயநிர்ணயப் பிரச்சினை, சாதிப் பிரச்சினை, பெண்கள் பிரச்சினை மூன்றிற்கும் இந்திய கம்யூனிஸ்டுகள் தனிச்சிறப்பான கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. இவை வர்க்கப் போராட்டத்திற்கு ஊடாக உள்ள சிக்கலான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரச்சினைகள். இவற்றின் மீதான நிலைப்பாடுகள் மற்றும் அணுகுமுறைகளில் கம்யூனிச இயக்கம் செய்த / செய்து வரும் தவறுகளினால் அதன் வளர்ச்சி தடைபடுகிறது. ஒரு சில குழுக்கள் இம்மூன்று பிரச்சினைகளிலும் குறிப்பிட்ட பிரச்சினைகளில் சரியான நிலைப்பாடுகள் எடுத்திருந்தாலும் அவை மிச்சம் வைத்திருக்கும் சில தவறுகளால் பொதுவில் வளர்ச்சி தடைபடவே செய்கிறது.

கம்யூனிஸ்டுகள் அல்லது கம்யூனிச இயககம் என்று சொல்லும்போது வலது-இடது போலிக்கம்யூனிஸ்டுகளையும் உள்ளடக்கும் என்றாலும் நாம் அவர்களின் துக்ககரமான துரோகம் நிறைந்த காலத்தை மறந்து விடுவோம். வலது-இடது போலிக் கம்யூனிஸ்டுகள் பிற முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவக் கட்சிகளைப் போலவே எதிர் நிலைப்பாடுகள் எடுத்து அதாவது இந்தியாவிலுள்ள தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை எதிர்த்து, பார்ப்பனியத்தை ஆதரித்து, பொது சிவில் சட்டம் போன்றவற்றில் பெண்விடுதலைக்கு எதிரான - மதத்திற்கு ஆதரவான முடிவுகளை எடுத்து தம்மை தாமே இனங்காட்டி நிற்கின்றனர். எனவே இப்போலிக் கம்யூனிஸ்டுகளின் அனுபவத்தை எதிர்மறை படிப்பினைகளாக்கிக் கொண்டு அவர்களின் தவறுகளை மறுதலித்து எழுந்த மா-லெ இயக்கத்தையே நான் இங்கு குறிப்பிடுகிறேன்.

மா-லெ குழுக்கள் மத்தியில் இம்மூன்று பிரச்சினைகள் தொடர்பாக சித்தாந்தப் போராட்டம் - கருத்து வேறுபாடு நிலவுகிறது. மா-லெ-மா நிலைப்பாடுகளுக்குள்ளும் அவற்றை இந்தியாவில் பிரயோகிப்பதற்குள்ளும் சித்தாந்தம் போராட்டம் நடந்து வருகிற நிலையில், கூடுதலான இம்மூன்று பிரச்சினைகளையும் இரண்டாம், மூன்றாம் நிலையில் வைத்து இக்குழுவினர் விவாதித்து வருகின்றனர். இவற்றில்கூட பெண்விடுதலை தொடர்பான கருத்துப்போராட்டம் மிகமிக குறைவாக உள்ளது அல்லது அறவே இல்லை என்று சொல்லலாம். குழுக்கள் அளவில் அளவு ரீதியாக வேறுபாடு இருக்கலாமே ஒழிய இவை பொதுவான நிலைமைகள்.

இந்தியப் பெண்கள் மீதான சில அரசியல், பொருளாதார, கலாச்சார ஒடுக்குமுறைகள், அநீதிகளை எதிர்த்து தட்டிக்கேட்பதும், முதலாளித்துவத்தின் சீரழிவுகளை, அது கம்யூனிசத்தின் மீது வீசும் அவதூறுகளை அம்பலப்படுத்துவதும்தான் மா-லெ குழுக்கள் பெண்கள் பிரச்சினையில் செய்து வரும் நடவடிக்கை. இச்செயல் கம்யூனிச ஆசான்கள் மற்றும் கிளாரா, குழந்தாய் போன்றவர்களும் அன்று செய்த செயலின் நீட்டிப்புதானே ஒழிய எவ்வித முன்னேற்றமும் இல்லை, மாற்றமும் இல்லை. பெண் விடுதலைப் பிரச்சினைகளில் அரசியல், பொருளாதார ரீதியாக ஆய்வு அடிப்படையில் கோட்பாடுகளை வைப்பதும், கலாச்சாரம் மற்றும் குடும்பம் தொடர்பான வரையறைகளுக்கு வருவதும் அதற்கான முயற்சியும் இல்லை. ஆண் பெண்களுக்கு இடையே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சமத்துவமான உரிமையை - நடைமுறையை இச்சமூகத்திற்குப்பட்டு சாத்தியப்பட்ட வழிகளிலெல்லாம் கடைபிடிக்க முழு அக்கறை காட்டவில்லை. ஆணாதிக்கத்தின் கருத்துக்கள் - செயல்பாடுகள் சில, இக்கம்யூனிச இயக்கத்திற்குள்ளும், இவர்களின் குடும்பங்களிலும் பழைய சமூக நடைமுறையின் எச்சமாக காணமுடிகிறது.

கம்யூனிஸ்டுகள் பெண்விடுதலைக் கருத்துக்களை சகல அரங்கிலும் துள்ளியமாக முன்வைத்து போராடாத காரணத்தால்தான் இந்தியாவில் முதலாளித்துவ பெண்ணிலைவாதிகளின் கருத்துக்கள் மேலோங்கி நிற்கின்றன. இதனால்தான் கணிசமான நடுத்தர - படித்த பெண்கள் அவர்கள் பின்னே அணிதிரண்டிருப்பதைப் பார்க்கிறோம். அரசியலில் பெண்களின் பங்கேற்பு என்பது மிகவும் சிறிய அளவு என்றாலும் அதில் மிகச் சிறிய அளவினர்தான் ஆளுவர்க்கக் கட்சியல்லாது போலிக் கம்யூனிஸ்டு கட்சிகள், மா-லெ குழுக்கள் மற்றும் பொதுவான ஜனநாயக பெண்ணுரிமை அமைப்புகளில் அணிதிரண்டிருக்கிறார்கள். மா-லெ குழுக்களில் அணிதிரண்டிருக்கும் பெண்கள் பெரும்பாலோர் அக்கட்சியில் உள்ள ஆண்களின் உறவினர்களாகவே உள்ளனர். அதாவது மா-லெ குழுக்களின், பெண்கள் மத்தியிலான புரட்சிகர செயல்பாடு விரிவாக பரந்துபட்ட மக்களிடத்திலே செல்லவில்லை, ஒரு வட்டத்திற்குள்ளேயே குறுகி நிற்கிறது. இதுவே அவர்களிடம் ஆணாதிக்க மிச்ச சொச்சங்கள் நீடிப்பதற்கும் காரணமாக இருக்கிறது.

தமிழகத்தில் பெரியார், பெண்கள் முன்னேற்றத்திற்காக நல்கிய கருத்துக்கள் - சில நடைமுறைகள் உண்மையில் நினைவு கூறத்தக்கவை. பெண்களுக்கு மட்டும் போதிக்கப்பட்ட 'கற்பை' கேள்விக்குள்ளாக்கியது, தனிமனித ஒழுக்கத்தை இருவருக்கும் பொதுவாக்கி செய்யப்பட்ட பிரச்சாரம், தாலி மற்றும் சடங்குகள் எதுவுமில்லாத திருமணங்கள் நடத்தியது, திருமணத்தின் போது ஆண்வழி வரும் சொத்துக்களை இருவருக்கும் பொதுவாக்கியது என பலவற்றைக் குறிப்பிடலாம்.

பெரியார் செய்த அளவிற்குக்கூட கம்யூனிச இயக்கங்கள் பெண் விடுதலைக் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்யவில்லை, நடைமுறைப்படுத்தவில்லை என்பது வருத்தத்திற்குரிய விசயம். தாலி, சடங்கு, சம்பிரதாயங்கள் அற்ற திருமணங்களை பெரியார் இயக்கம் இன்று கைவிட்டிருந்தாலும் கம்யூனிச இயக்கம் அவற்றை நடைமுறைப்படுத்துகிறது. ஆனால் கம்யூனிச இயக்கத்தில் முழுநேரமல்லாத பகுதிநேர ஊழியர்கள், சிறு உடமையாளர்களாக இருக்கும்பட்சத்தில் ஆண் வழியோ, பெண்வழியோ வரும் சொத்துக்களை அவர்களது திருமணத்தில் இருவருக்கும் பொது என அறிவிப்பதையோ, சட்டப்படி இருவருக்கும் பொதுவாக பதிவுசெய்து வைப்பதையோ எந்த குழுவும் கை கொள்ளவில்லை.

மேலும், தாலி மற்றும் சடங்குகள் இல்லாமல் திருமணம் செய்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டதும் புரட்சிகர செயல் முடித்த பூரிப்பில் - திருப்தியில் கம்யூனிஸ்டுகள் வாளாயிருந்து வருகிறார்கள். புரட்சிகர திருமண நிகழ்ச்சிக்குப்பின் அவர்கள் புரட்சிகரமான வாழ்க்கையை மேற்கொள்கிறார்களா என்பது கேள்விக்குறியே. பெரும்பாலோரது மண வாழ்க்கை கம்யூனிச இயக்கத்துக்கு வெளியே இருக்கும் சாதாரண சராசரி மக்களைப்போல் பிறபோக்கு கருத்துக்களும் நடைமுறைகளும் நிறைந்ததாகவே இருக்கிறது.

ஆண், பெண் இருவரும் கம்யூனிச இயக்கத்தில் இருக்கும் பட்சத்திலும், இருவரில் ஒருவர் மட்டும் (பெரும்பாலும் ஆண்களே) கம்யூனிச இயக்கத்தில் இருக்கும்பட்சத்திலும் சராசரியை ஒத்த குடும்ப வாழ்க்கைதான் நடத்துகிறார்கள். எப்படி சாதாரண குடும்பங்களில் ஆண், பெண் இருவரும் வேலைக்குச் சென்றாலும், குழந்தை பராமரிப்பை பெண்கள்தான் கவனிக்கிறார்களோ அதே நிலைமை கம்யூனிச இயக்க குடும்பங்களிலும் நீடிக்கிறது.

இன்றைய சமூக நிலைமையில் வீட்டு அடிமை உழைப்பையோ, குழந்தைகள் பராமரிப்பையோ கூட்டுறவாக்கி - கௌரவமான சமூக நிலை கொடுக்க முடியாது என்பது தெளிவாக தெரிகையில் ஆண்கள், வீட்டு வேலைகளிலும் குழந்தை பராமரிப்பிலும் சமபங்கு எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம். மேலும் மாநாடுகளிலோ, பிற பொது நிகழ்ச்சிகளிலோ, சமையல் குழுவில் பெண்கள் மட்டும் இடம்பெறுகிற கொடுமையும் கம்யூனிச இயக்கத்தில் நடக்கிறது. சமைக்கத் தெரிந்த ஆண்களையுமல்லவா இடம்பெறச் செய்யவேண்டும். கம்யூனிச கருத்துக்கு மாறிவரும் ஆண்களை சமையல், சுத்தம் செய்தல், குழந்தை பராமரிப்பு போன்றவற்றில் ஈடுபடும்படி 'கட்டாயப்படுத்த' வேண்டும்; கடமையாக்க வேண்டும். குழந்தைகளையும் வேலைப்பாகுப்பாடின்றி பழக்கவும், வளர்க்கவும் வேண்டும். அதே போல் கம்யூனிச குடும்பங்களில் பெண்களை வருமானமுள்ள தொழில் ஒன்றை கற்றுக்கொள்ள 'கட்டாயப்படுத்த' வேண்டும்; பழக்க வேண்டும்.

பெண் கம்யூனிச இயக்க செயல்பாடுகளில் ஈடுபடாமல் இருக்கும் நிலையில் ஆண் சாதாரணமாக சொல்லுகிற வாதம் இது: "அவர்களுக்கு (பெண்களுக்கு) வேறு வேலையும் தெரியவில்லை. அரசியலிலும் ஈடுபாடு இல்லை: எனவே வீட்டு வேலைகளை செய்வதில் தப்பில்லை, அதுவும் ஒரு வேலைப்பிரிவினைதான், அப்படிதான் நாங்கள் பார்க்கிறோம்", இது அப்பட்டமான ஆணாதிக்க வாதம். தொழிலாளி நிர்வாகத்தில் பங்கு கேட்டால் முதலாளி கூறுகிற வாதமும் இப்படித்தான் இருக்கும்.

பெண்களை வீட்டு அடிமை உழைப்பிலிருந்து விடுவிக்கும் பொழுதுதான் அவர்கள் விடுதலைக்காற்றை சுவாசிக்க முடியும். ஒரு வர்க்கப் போராட்டக் கட்டத்தில் இது முழுமையாக சாத்தியமில்லாததால் அவர்களின் சுமையில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாதியளவிற்காவது ஆண் பங்கெடுத்து கொள்வதன் மூலம் குறைக்கலாம். அப்பொழுதுதான் அவர்களது அரசியல் - சமூக நடவடிக்கைகள் அதிகரிக்கும். அரசியலில் நாட்டம் - ஈடுபாடு கூட மெல்ல துளிர்ப்பதற்கு இது முன்தேவையாகவும் உள்ளது. வீட்டு வேலைகளில் சம பங்கு எடுத்துக் கொள்ளாத ஆண், தமது துணைவிக்கு அரசியலில் ஈடுபாடில்லை, சமூக செயல்பாடுகளை வளர்த்துக் கொள்வதில்லை எனக் குற்றம் சுமத்த எந்த அருகதையும் இல்லை.

இன்னும் சிலர், ஒரு சில வீட்டு வேலைகளில் எப்பொழுதாவது பங்கெடுப்பதைச் சுட்டிக்காட்டி தம்மை நியாயவனாகக் காட்டிக்கொள்ள முயற்சிக்கிறார்கள். ஆனால் வேலை செய்த அச்சூழ்நிலைகளையும் ஆராய்ந்தால் வேறுவழியில்லாமல் - தவிர்க்க முடியாமல் செய்த உதவியாகவே அவை இருக்கும்.

தற்போதைய சமூகத்தில் குடும்ப அமைப்பே ஆளும்வர்க்கத்தின் சுரண்டலுக்குள்ளாகிற ஒன்று. ஆளும் வர்க்கத்திற்கு குடும்பத்தில் ஆணும் ஒரு அடிமைதான், அவனும் சுரண்டப்படுகிறான். ஆணுக்கு சேவை செய்யும் பெண்களின் உழைப்பும் ஆளும்வர்க்கத்திற்கு கிடைக்கும் உபரியுள் ஒன்று. அதாவது குடும்ப அமைப்பு மறு உற்பத்திக்கான களமாக மட்டுமல்ல, அது ஆளும் வர்க்கத்திற்கு உபரி உழைப்பையும் நல்குகிறது. முதலாளியும், பண்ணையாரும் கொடுக்கும் கூலி, வேலை செய்யும் ஆணுக்கு மட்டுமே சொந்தமானது அல்ல; அது அவனுக்கு ஊழியஞ் செய்யும் பெண் மற்றும் குழந்தைகளுக்கும் சேர்த்துத்தான். ஆனால் "சம்பாதிப்பவன் நான்" என்கிற முறையில் ஆண் குடும்பத்தில் ஆதிக்கம் செலுத்துகிறான். குடும்பத்தில் ஆதிக்கம் புரிபவன் என்பதை வைத்து பல குடும்பங்கள் இணைந்த ஊர், தெரு பொது நடவடிக்கைகளில் பங்கு கொள்ளவும், முடிவெடுக்கவும் உரிமை பெறுகிறான். உழைக்கக் கூடிய ஆண், சமுதாயத்தில் ஒரு அடிமையாக இருந்தாலும் குடும்பத்தில் எஜமானாக உள்ளான். ஆனால் பெண், சமுதாயத்திலும் குடும்பத்திலும் அடிமையாகவே இருக்கிறாள்.

> **மா-லெ குழுக்கள் பெண்கள் பிரச்சினையில் செய்து வரும் பணி, கம்யூனிச ஆசான்கள் மற்றும் கிளாரா செட்கின், குழந்தாய் போன்றவர்களும் அன்று செய்த செயலின் நீட்டிப்புதானே ஒழிய எவ்வித முன்னேற்றமும் இல்லை, மாற்றமும் இல்லை.**

இத்தகைய ஆணாதிக்க முறைகள் எதுவும் கம்யூனிஸ்டு குடும்பங்களில் இருக்கக்கூடாது. இச்சமூகத்திலேயே, குடும்பத்தில் அடிமையை வைத்துக் கொள்ளவேண்டும் என்ற பலாத்காரமான நிர்ப்பந்தம் எதுவும் இல்லாதபோதும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



துணைவியை அடிமை போல் வேலை வாங்குவதன் அர்த்தம், பழைய சமூக கருத்துக்கள் - நடைமுறைகள் ஒட்டிக் கொண்டிருக்கிறது என்பதே. அடிமை முறைகளையே ஒழிக்கும் பாட்டாளி வர்க்கப் போராட்டத்திற்கு ஒரு அடிமையை உடன் இணைத்துக் கொள்ள முடியாது. வரலாற்றைப் புரட்டுங்கள், போர்க்காலங்களில் வேறு வழியின்றி பெண்களையும் இறக்கிவிடும்பொழுது, அவர்கள் விழிப்புணர்வு பெற்று தமது அடிமைத்தனத்திற்கு எதிராகவும் போர்க்குரல் எழுப்பியுள்ளதைப் பார்க்கலாம்.

வர்க்க சமுதாயத்தின் தாக்கம் குடும்பத்தில் சண்டைகளாக சச்சரவுகளாக பிரதிபலிக்கும். கம்யூனிச குடும்பத்திலுள்ள பெண்கள், நிகழும் சமுதாய பிற்போக்கு கருத்துக்களின் தாக்கத்திற்குட்பட்டு எதிரும் புதிருமான நபராக இருப்பது பெரும்பான்மையாக உள்ளது. இவர்களிடமுள்ள பிற்போக்கு கலாச்சாரம் மற்றும் பழக்க வழக்கங்களைப் பற்றி அலட்டிக் கொள்ளாமல் சங்கம் கட்டி போராட்டத்தை நடத்தி கணக்கு காட்டுவது போலிக் கம்யூனிஸ்டுகளின் வாடிக்கை. இத்தவறை மறுதலித்து குடும்பப் பெண்களிடமுள்ள பிற்போக்கு கலாச்சார பழக்க வழக்கங்களை கைவிடப் போராடும் மா-லெ கம்யூனிஸ்டுகள் வேறு ஒரு தவறிழைக்கிறார்கள். அதாவது "போராடுகிறேன் பேர்வழியென" சர்வாதிகார நடவடிக்கைகளை கை கொள்கிறார்கள். இதன் மூலம் நேச முரண்பாட்டை பகை முரண்பாடாக ஆக்கி விடுகிறார்கள். இன்னும் சிலரோ, வெளியில் சமூகத்திலுள்ள பிற்போக்கு கலாச்சார தாக்கத்திலிருந்து "பாதுகாக்கிறேன் பேர்வழியென" அதீத எச்சரிக்கையில் வீட்டிலேயே பூட்டி வைத்து, பிற கட்டுப்பாடுகளைப் போட்டு அதே ஆணாதிக்க வகை சர்வாதிகாரத்தை கடைபிடிக்கிறார்கள். பிற்போக்கு கலாச்சார பழக்க வழக்கங்களை எதிர்க்கும் சக்தியை - திறனை இயல்பாகவே உருவாக்குவதும் அதை ஜனநாயகப்பூர்வ வழிமுறைகளில் செய்வதும்தான் பயனளிக்கும். இதைத்தானே சமூகத்திலுள்ள பிற நபர்களிடம் கம்யூனிஸ்டுகள் கடைபிடிக்கிறார்கள்?

எனவே, கம்யூனிஸ்டுகள் நிலப்பிரபுத்துவ சமூகத்தின் எச்சங்களை ஆணாதிக்கம் மற்றும் சர்வாதிகார நடைமுறைகளை இனங்கண்டு களையவும், தாலி சம்பிரதாயங்களை புறக்கணித்து விடுவதாலேயே பிற்போக்குகளை ஒழித்து புரட்சிகர நடைமுறையில் இருப்பதாக கருதும் முதலாளித்துவ சட்டவாதத்தைப் போன்ற தவறை இனங்கண்டு களையவும் வேண்டும். இதற்கு முன் தேவையாக பெண்விடுதலைப் பிரச்சினையில் கோட்பாடு, நெறிமுறைகளுக்கான பங்களிப்புகளை செய்ய கம்யூனிஸ்டு இயக்கம் முக்கியத்துவம் தரவேண்டும். பெண் விடுதலைக் கருத்துப் போராட்டத்தை துள்ளியமாகவும் சகல அரங்கிலும், கட்சிக்குள்ளும் வெளியேயும் நடத்த வேண்டும்.

பெண் விடுதலைப் போராட்டத்தை முதலாளித்துவப் பெண்ணிலைவாதிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போல் முதன்மையாக பிரதானமாக எடுத்துச் செல்வதும் தவறு. போலிக் கம்யூனிஸ்டுகளைப் போல் வர்க்கப் போராட்ட வெற்றிக்குப்பின் - சோசலிசப் புரட்சிக்குப்பின் செய்ய வேண்டிய பணி என்று ஒதுக்குவதும் தவறு. இந்திய உற்பத்தி முறையுடன் தொடர்புடைய வர்க்கப் பிரச்சினை, சாதிய பிரச்சினை, ஆணாதிக்கப் பிரச்சினை மூன்றிலும் வர்க்கப் பிரச்சினையைத் தீர்க்கும் போராட்டமே முதன்மையானது - பிரதானமானது. அதற்கு அடுத்த நிலையில்தான் மற்றவை. சமூக அடுக்குகளில் ஆணாதிக்க ஒடுக்குமுறை கீழ்நிலையில் இருப்பதால் சமூக அளவில் அது ஒரு பெரும் பிரச்சினையாக வெடித்து வெளித்தெரிவது அரிது. ஆனால் சாதிய ஒடுக்குமுறையோ நேரெதிரானது. திடீரென வெடித்து பெரும் பிரச்சினையாகி நிற்கும். இருந்தாலும், சாதி ஒழிப்பு போராட்டத்தையும், பெண் விடுதலைப் போராட்டத்தையும் வர்க்கப் போராட்டத்திற்கு இணையாகவும் அதாவது போலிக் கம்யூனிஸ்டுகளைப் போல் ஒதுக்காது தற்போதைய சமகாலத்திலேயே, துணையாகவும் அதாவது முதலாளித்துவ பெண்ணிலைவாதிகள் போல் முதன்மையாக அல்லாமல் வர்க்கப் போராட்டத்திற்குட்பட்டு அடுத்தடுத்த நிலையில் முக்கியத்துவமளித்தும் எடுத்துச் செல்லவேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 3

இந்தியாவிலுள்ள மா-லெ குழுக்களில் தமிழகத்திலுள்ள மா.அ.க., அரசியல் நிலைப்பாடுகள் எடுத்து சில முன்னுதாரணமிக்க பங்களிப்புகள் செய்துள்ளது. பிற்போக்கு கலாச்சாரத்தைப் புறக்கணிக்கும் கம்யூனிஸ்டுகள், மாற்றாக, இச்சமூக காலக்கட்டத்திலேயே கடைபிடிக்கவேண்டிய கலாச்சாரத் தேவையை உணர்ந்து, "பாட்டாளி வர்க்கப் பண்பாட்டு நெறிமுறைகளை" உருவாக்கியுள்ளது. ஒரு சிறு நூலாகவும் இதனை வெளியிட்டு கட்சியிலுள்ள அணிகள் அவற்றை கடைபிடிக்க போராடியும் வருகிறது. ஆனால் சாதிய ஒழிப்பு, பெண் விடுதலைக்கென பொது கோட்பாட்டு முடிவுகளுக்கு வந்தடையாத நிலையில் இப்பண்பாட்டு நெறிமுறைகள் நூல் குறைப்பிரசவமாக சில தவறுகளுடன் இருக்கிறது. இப்பண்பாட்டு நெறிமுறைகளிலும் அவர்களின் கலாச்சார பத்திரிகையிலும் உள்ள சில விசயங்கள் இவ்வமைப்புத் தலைமையிடம் ஆணாதிக்க மிச்சசொச்சம் நீடிப்பதற்கு ஆதாரங்களாக விளங்குகின்றன.

இப்பண்பாட்டு நெறிமுறைகளில் திருமணத்திற்கு ஆணுக்கு வயது 21 என்றும் பெண்ணுக்கு வயது 18 என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது சமூகத்திலுள்ள ஆணாதிக்க சிந்தனை அடிப்படையில் அமைந்த பாகுபாடே (அதாவது ஆண்தான் மூத்தவனாக இருக்க வேண்டும் என்பது) தவிர, விஞ்ஞானப் பகுப்பாய்வு அடிப்படையிலானதல்ல. பெண் 21 வயதில்தான் உடல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் திருமணத்திற்குரிய பக்குவமடைகிறாள் என்கிற மருத்துவ வல்லுநர்களின் கண்டுபிடிப்புக்குப் பின்னே இன்றைய அரசே இத்தகைய பிரச்சாரத்தை செய்து வருகிறது. மா.அ.க., அண்மையில் இந்த விதியை மாற்றி இருபாலருக்கும் திருமண வயது வரம்பு 21 என்று அறிவித்துள்ளது. ஆனால் முன்பு உருவாக்கிய விதியிலுள்ள தவறுக்கு உரிய சுயவிமர்சனத்தை செய்து கொள்ளவில்லை. தவறுக்கான காரணம் மற்றும் அடிப்படைக்குள் போக மறுக்கிறது. (சோவியத் ரஷ்யாவில், ரஷ்ய குடியரசில் திருமண வயது வரம்பில் வித்தியாசம் இருக்கவில்லை, பிற குடியரசுகளில் ஒன்று அல்லது இரண்டு வயது பெண்ணுக்கு குறைவாக இருக்கலாம் என சட்டமாக்கியுள்ளனர். இதற்கான நோக்கம், காரணம் தெரிய வரவில்லை).

மேலும், திருமணத்தில் வயது வேறுபாடு இருபாலருக்கும் இடையே 10க்கு மேல் இருக்கக் கூடாது, சிறப்பான நிலைமைகள் தனியாக முடிவெடுக்கப்படும் என்றுள்ளது. சரி பத்து வயது வித்தியாசத்திற்குமேல் எத்தனை வரை இந்த சிறப்பு சலுகை? பொருந்தாத் திருமணத்திற்கு அளவுகோல் - வயது வித்தியாசம் என்ன? (ஏனெனில், பெரியார்-மணியம்மை திருமணத்தை மா.அ.க., பொருந்தாத் திருமணம் என்று விமர்சித்துள்ளது).

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேலும் இந்நூலில் உள்ள பல விதிகள் இருபாலருக்கும் பொதுவானதாக இல்லாமல் ஆண்களுக்கு மட்டுமே சொல்லப்பட்டதாக உள்ளன.

1. 13ம் பக்கத்தில் குடும்பத்தினரை அரசியல்படுத்த வேண்டும் என்று சொல்லும்போது "திருமணமாகாத சகோதரிகளை அரசியலை ஏற்க வைக்க வேண்டும்..... தோழர்களுக்கு மணம் செய்து கொடுக்க முயல வேண்டும்" என்று உள்ளது. இதில் "திருமணமாகாத சகோதர - சகோதரிகளை அரசியலை ஏற்க வைக்க வேண்டும்...." என்று இருப்பதே சரியானதாக இருக்கும்.

2. அதே பக்கத்தில் "அரசியலை ஏற்கும் பெண் தோழர்கள் எளிமை, மலி வானவை என்றால்கூட நகைகள் அணிவது கூடாது" என்று உள்ளது. பெண்களைக் காட்டில் ஒப்பீட்டளவில் குறைவாக இருந்தாலும் ஆண்களும் கை, கழுத்தில் நகைகள் அணிகிறார்கள். இதில் "அரசியலை ஏற்கும் ஆண்/பெண் தோழர்கள் அல்லது (வெறும்) தோழர்கள்...." என்றல்லவா இருக்க வேண்டும்.

3. அதே பக்கத்தில் குடும்பத்தினரிடம் உள்ள பிற்போக்குக் கருத்துக்களை களைய போராடுவது பற்றி குறிப்பிடுகையில் "நம்முடைய சரியான தன்மைகளும், கறாரான நடத்தையும்தான் பெண்களின் அல்லது குடும்பத்தாரின் தவறான அணுகுமுறையை இளக்கி...." என்றுள்ளது. இதில் "பெண்களின்" என்பதற்குப் பதிலாக "வாழ்க்கைத் துணையின்" என்று பொதுவாகத்தான் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

4. குழந்தைகளிடம் என்ற உபதலைப்பில் 15ம் பக்கத்தில் "சிறு வயதிலிருந்தே குழந்தைகளிடம் நாம் சாதியற்றவர், மதமற்றவர் எனவும், ஏழைகள் உழைக்கும் மக்கள் பக்கம் நிற்பவர் எனவும் போதிக்க வேண்டும்" என்று உள்ளது. இங்கும் சரி, பிற இடங்களிலும் சரி குழந்தைகளுக்கு ஆண் - பெண் சமத்துவத்தையும் போதிக்க வேண்டும் என்று ஏன் குறிப்பிடப்படவில்லை?

5. சமூக பழக்கங்கள் என்ற தலைப்பின் கீழ் "அ" பரிவில் குழந்தைகளை பள்ளியில் சேர்க்கும் போது சாதியற்றவர், மதமற்றவர் என்றே சேர்க்க வேண்டும் என்பது உள்ளது. ஆனால் குழந்தைக்கு முதலெழுத்தாக (Initial) தாய், தந்தை பெயர்களின் முதல் எழுத்துக்களையும் குறிப்பிட வேண்டும் என்பது வலியுறுத்தப் படவில்லை. குழந்தைகளுக்கு தந்தை பெயரின் முதலெழுத்தை மட்டும் குறிப்பிடுவதும் பெண்ணுக்கு திருமணம் ஆனபின் கணவன் பெயரின் முதல் எழுத்தை குறிப்பிடுவதும் ஆணாதிக்க சமூகத்தின் முத்திரைகளாக விளங்குகின்றன. சில ஆண்டுகளுக்கு முன்பே சில பெண்ணுரிமை சிந்தனையாளர்களிடமிருந்து தாய், தந்தையின் முதலெழுத்தைப் போடுவதும் கடைசிவரை அதையே கடைபிடிப்பதும் வேண்டும் என்ற கோரிக்கை வந்துவிட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



6. இதே நூலில் 14ம் பக்கத்தில் குழந்தை வளர்ப்பு பற்றி சொல்லும்போது தாய் முதல் பங்காற்றுவதால் அவர்களுக்கு குழந்தை வளர்ப்பு பற்றி போதிக்க வேண்டும் என்ற கருத்து உள்ளது.

உண்மையில் இன்றைய சமூக நடைமுறையைப் போல கம்யூனிச குடும்பங்களில் குழந்தை வளர்ப்பு, பராமரிப்பில் ஆண்கள் பங்கெடுத்துக் கொள்வதில்லை, அக்கறை காட்டுவதில்லை என்பதுதான் நடைமுறை. குழந்தை பராமரிப்பு பணிகளில் பங்கெடுத்துக் கொள்ளும்படி உண்மையில் ஆண்களுக்குத்தான் வலியுறுத்தி விதி உருவாக்கி இருக்க வேண்டும். குழந்தை வளர்ப்பில் தாயின் கவனிப்பும் தேவையும் பலவற்றில் பாலூட்டும் காலம் வரைமட்டுமே அத்தியாவசியம். இதற்குப்பின் தாய், தந்தை இருவருமே வளர்ப்பில், பராமரிப்பில் சம பங்காற்றவேண்டும். தாய் மட்டுமே பங்கு செலுத்துகிற சாதாரண சமூக நடைமுறையை மாற்றும்படி இல்லை, ஆணாதிக்க வகைப்பட்ட ஒன்றாகவே உள்ளது.

இத்தகைய விமர்சனங்களுக்கு மா.அ.க., "ஆண்களுக்காக மட்டுமே சொல்லப்பட்டிருப்பது யதார்த்தத்திலிருந்து தீர்மானிக்கப்பட்டதாகும். கட்சியில் இன்றைய நிலையில் ஆண் தோழர்களே இருப்பதாலும் ஆணாதிக்கத்தை எதிர்க்க வேண்டியிருப்பதாலும் இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. பெண் ஆதரவாளர்களுக்கு என்று தனியே சொல்ல வேண்டிய அவசியமில்லை" என்று பதிலுரைக்கிறது.

மேலும் "எதார்த்தத்தில் கட்சித் தோழர்கள் தாம் மட்டுமே அரசியல் வேலையில் ஈடுபடுவது, தம் குடும்பப் பெண்களை அதிலிருந்து ஒதுக்கி வைப்பது, பாதுகாப்பாக குடும்பமாகவும் சகோதரிகளை மணமுடித்தும் அனுப்ப முயல்வது போன்ற தவறான நடைமுறை வைத்திருப்பதைத் திருத்துவதற்காகவே அது சொல்லப்பட்டது" என்று மா.அ.க., விளக்கமளிக்கிறது.

புதிய ஜனநாயகப் புரட்சிக்கு உறுதுணையாக பாட்டாளி வர்க்க கலாச்சாரத்தைக் கடைபிடிக்க வேண்டியுள்ளது என நெறிமுறைகளை உருவாக்கிவிட்டு, தற்போது கட்சியில் ஆண்கள் மட்டுமே இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக ஆண்களுக்காக சொல்லப்படுகிற விதிகளை வைத்திருப்பது எவ்விதத்தில் சரி? புதிய ஜனநாயகப் புரட்சி வரை அல்லது கட்சி ஐக்கியம் வரை பெண்கள் ஆதரவாளர்களாகவும் நண்பர்களாகவும் தான் இருப்பார்கள் என்றல்லவா அர்த்தமாகிறது? பண்பாட்டு - கலாச்சார நெறிமுறைகள், இயற்கை மற்றும் விஞ்ஞான ரீதியான சில வேறுபாடுகளைத் தவிர இருபாலருக்கும் பொதுவாகவே இருக்க வேண்டும்.

இப்படி ஆண்களுக்கு மட்டுமே வலியுறுத்துவதுதான் ஆணாதிக்கத்தை எதிர்க்கும் வழிமுறை என்றால் 6-வது விசயத்தில் குழந்தை பராமரிப்பில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பங்கெடுத்துக் கொள்ளாதிருக்கும் ஆண்களுக்கு அல்லவா விதி வலியுறுத்தப்பட்டிருக்க வேண்டும்? மேலும் மா.அ.க.வின் கலாச்சார அமைப்பு நடத்தும் புரட்சிகரத் திருமணத்தில் மணமக்கள் உறுதிமொழி படிப்பதில் இருபாலருக்கும் ஒன்றாகவே இருக்கிறது. ஒருவர் உரிமையை ஒருவர் அங்கீகரிப்போம், ஒருவரையொருவர் சமமாக நடத்துவோம் என்று பொதுவாக வருகிறதே ஏன்? உண்மையில் "ஆணாதிக்க நடைமுறைகளை மேற்கொள்ள மாட்டேன்" என்பது போன்று ஆண்களுக்கல்லவா தனி உறுதிமொழிப் படிவம் இருக்க வேண்டும்?

மா.அ.க., யதார்த்தத்திலிருந்து தீர்மானித்த விசயம் அல்லது நடைமுறை அனுபவம், ஆண்களிடமிருந்து மட்டுமே பெறப்பட்ட ஒருபக்க - ஒரு பால் சார்ந்த அனுபவமாகத்தான் இருக்கிறது. அந்த ஒரு பால் அனுபவத்திலிருந்து பெறப்பட்டதை அந்தப் பாலிற்கே வழிகாட்டுகிறார்கள் அவ்வளவுதான். இந்த யதார்த்த நிலைமையிலிருந்து அதுவும் குறுகிய, சிறுவீத அனுபவத்திலிருந்து பெறப்பட்டதையே பு.ஜ. புரட்சி வரைக்கும் கட்சிக்குள்ளிருப்பவர்களுக்கான பொது நெறிமுறைகளாக்கிவிட முடியுமா? முதலாளித்துவ கூறுகள் கொண்ட குட்டி முதலாளித்துவ பிரிவு, தொழிலாளர்கள் பிரிவு சார்ந்த பெண்கள் - குடும்பங்களிடையே கட்சி செயல்பாடு மிகவும் தொடக்க நிலையிலிருக்கும் பொழுது ஆய்வின்றி, நிலப்பிரபுத்துவ சிந்தனை கொண்டவர்களிடமிருந்து பெறப்பட்ட ஒரு அனுபவ வாதத்தையே மா.அ.க. முன்வைக்கிறது.

> **தாலி மற்றும் சடங்குகள் இல்லாமல் செய்யும் புரட்சிகர திருமண நிகழ்ச்சிக்குப்பின் கம்யூனிஸ்டுகள் புரட்சிகரமான வாழ்க்கையை மேற்கொள்கிறார்களா என்பது கேள்விக்குறியே.**

மேலும் நிலப்பிரபுத்துவ வகைப்பட்ட உறவு முறையில் அக்கா, அத்தை, மாமனின் மகள் அல்லது மகளைத் திருமணம் செய்து கொள்ளும் பழக்கம் கம்யூனிஸ்டுகளிடையே உள்ளது. இம் முறை விஞ்ஞானத்திற்குப் புறம்பானது; நெருங்கிய ரத்த உறவுள்ளோர் மூலம் குழந்தைப் பெற்றுக்கொண்டால் ஆரோக்கியமற்ற குழந்தைகளும் மூளை மற்றும் உடல் ஊனமுற்ற குழந்தைகளும் பிறக்க வாய்ப்பு அதிகம் என்பது மருத்துவ கண்டுபிடிப்பு. மா.அ.க.வின் நெறிமுறைகளில் சொந்த சாதிக்குள்ளோ, சொந்த உறவினர்களுக்குள்ளோ திருமணம் இருக்கக்கூடாது என்ற விதியும் இருக்க வேண்டுமல்லவா?

இதேபோல் திருமணத்தில் உயரம் மற்றும் சம்பாத்தியம் ஆண் தரப்பில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதிகமாக இருக்க வேண்டும் என்ற சிந்தனை - நடைமுறை சாதாரண சமூகத்திலிருக்கிறது. இதற்கு எதிரான விதிகள், இன்னும் இதுபோன்று பல பாலியில் முரண்பாடு தொடர்பான விசயங்கள் மா.அ.க.வின் பண்பாட்டு நெறிமுறைகளில் விடுபட்டுள்ளன.

யதார்த்தத்திலிருந்து யோசித்து யதார்த்தத்தை மாற்றுவதற்குரிய கோட்டுபாடுகளை, நடைமுறைகளை கடைபிடிக்க வேண்டும். ஆனால், மா.அ.க., பெண்கள் பிரச்சினை சிலவற்றில் யதார்த்தத்தோடு வால்பிடித்துச் செல்வது, யதார்த்தத்தோடு சமரசம் செய்து கொள்வது ஆகிய தவறுகளை செய்துள்ளது. இதற்கு சில உதாரணங்கள் அவர்களது கலாச்சாரப் பத்திரிகையில் உள்ளன.

1983 டிசம்பர் இதழில் பக்கம் 8ல் "மாற்றம்" என்ற சிறுகதையில் புரட்சிகர திருமணங்களில் உழவு மாட்டை சீதனமாக - சீராக கொடுக்கலாம் என்று எழுதியிருப்பதும் பிறகு வாசகர்கள் சுட்டிக்காட்டியபின் மார்ச் '84 இதழில் பக்கம் 27ல் "ஏதோ ஒரு வகையில் நிலப்பிரபுத்துவத்துடன் சமரசம் செய்து கொண்டது தவறு" என்று சுயவிமர்சனம் செய்து கொள்ளப்பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது. ஆனால் இதே வகை தவறு டிசம்பர் '83 இதழுக்கு முன்பு செப்டம்பர் '83 இதழில் கேள்வி-பதில் பகுதியில் நடந்திருக்கிறது. அது:

● என் நண்பன் பின்வருமாறு என்னைப் பார்த்து சொல்கிறான்: "நீ உன் மனைவியை வா, போ என்று கூப்பிடுகிறாய், உன் மனைவியோ உள்ளை வாங்க, போங்க என்று சொல்கிறார்கள். ஆண்-பெண் சமத்துவம் என்று வெளியில் பேசுகிறீர்கள், வீட்டுக்குள்ளே நிலப்பிரபுத்துவக் கலாச்சாரத்தைப் பின்பற்றுகிறீர்கள்" - யோசித்துப் பார்த்த எனக்கு குழப்பம்தான் மிஞ்சியது. தயவுசெய்து தெளிவுபடுத்த விரும்புகிறேன் - செல்லப்பா, துறையூர்.

★ இன்றிருக்கின்ற சமுதாய அமைப்பில் இப்படிப்பட்ட சிக்கலான நிலைமை எழுகின்றது. நீங்கள் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரத்தைப் பின்பற்றுகிறவராக இருந்து உமது துணைவியாரும் அவ்வாறே இருந்தால் இருவரும் ஒருவரையொருவர் தோழர் என்று அழைத்துக் கொள்ளலாம். வாங்க, போங்க என்று அழைப்பதே சரியாக இருக்கும். **எனினும், இன்றைய சூழ்நிலையில் இது மிகவும் அலாதியாக, வித்தியாசமாக கருதப்படுவதால் மனைவியை நீ என்று அழைப்பது தவறாகாது** என்றே கருதுகிறோம். ஆனால் மற்றெல்லா நடைமுறைகளிலும் பாட்டாளி வர்க்கக் கலாச்சார நடைமுறையைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும். **உங்கள் மனைவி பாட்டாளி வர்க்கக் கலாச்சாரத்தை ஏற்றுக் கொள்ளாத போதும் நீ என்று அழைக்கலாம்.** அதே சமயத்தில் நீங்கள் பாட்டாளி வர்க்கக் கலாச்சார

www.tamilarangam.net


நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். (செப்டம்பர் '83 பக்கம் 12)

மேலும் "ஆண்மை", "விபச்சாரி" போன்று பலவார்த்தைகளை பிரச்சினைக்குரிய வண்ணம் பயன்படுத்துவது தொடர்கிறது. கலாச்சார பத்திரிகையிலிருந்து சில: பிப்ரவரி '94 இதழில் கவிதை வரி ஒன்றில் "ஆண்மையோடு நான் ஏந்துவேன் துப்பாக்கியை" என்றும், செப்டம்பர் '85 இதழில் தலைப்பொன்று "கற்பை போதிக்கும் விபச்சாரிகள்" என்றும், ஆகஸ்டு-அக்டோபர் '93 இதழில் பக்கம் 16ல் வைரமுத்து, ஏ.ஆர். ரகுமான் இணைந்திருக்கும் படத்தின் அடிக்குறிப்பில் "இலக்கிய விபச்சாரியுடன் இசை விபச்சாரி" என்றும் உள்ளது.

நிலப்பிரபுத்துவ ஆதிக்கம் மொழியில் சில வார்த்தைகளாகவும், வார்த்தைக்கு பொருளைக் கொடுத்துக் கொண்டிருப்பதையும் பார்க்கலாம். சாதி ரீதியாக இழிவுபடுத்தும் வார்த்தைகள் - அர்த்தங்கள், ஆணாதிக்க ரீதியாக பெண்களை இழிவுபடுத்தும் வார்த்தைகள் - அர்த்தங்கள். நமது மொழியில் நிறைய உண்டு. இவற்றைப் புறக்கணிப்பதும் மாற்றுச் சொல்லை உருவாக்குவதுமே சரியானது. ஆண்மை என்பதற்கு துணிவு - தைரியம் என்றும் பெண்மை என்பதற்கு அச்சம் - நாணம் - பயிர்ப்பு - மடமை - மென்மை என்றும் பொருள் உருவேற்றம் செய்யப்பட்டது. நிலப்பிரபுத்துவ இலக்கிய காலங்களில்தான் இருக்க வேண்டும். அதேபோல் "விபச்சாரி" என்ற பதத்திற்கு இணையாக ஆண்பாலில் எந்தச் சொல்லும் இல்லாததற்கு காலம்காலமாக ஆணாதிக்க முறை நீடித்ததன் விளைவாக அல்லாமல் வேறென்ன? விபச்சாரி, மொட்டச்சி, கட்டுக்கழத்தி, ஓடுகாலி போன்ற இழிவான வார்த்தைகள் ஆண்களுக்குப் பொருத்தம் ஆகாதது - பாதிப்பை உண்டு பண்ணாதது போல், ஓவியன், கவிஞன், தச்சன், சிற்பி, கலைஞன் போன்ற 'கௌரவமான' ஆண்பால் பதங்கள் பெண்களுக்கு இல்லை, பெண்களுக்குப் பொருத்த முடியவில்லை. பொதுப்பாலில் ஓவியர், கவிஞர் என்று தான் தற்போது அழைத்துக் கொள்ளப்படுகிறது.

ஆனால், "ஆண்மையோடு துப்பாக்கி ஏந்துவேன்" என்ற பாடலை பெண் பாடுவது இயலுமா? ஒரு ஆணின் சமூகக் கேடான விசயத்தை, பெண்பாலை இழிவுபடுத்தும் "விபச்சாரி" என்ற வார்த்தையில் திட்டுவது தகுமா? ஒருவன் செய்கிற அசிங்கமான செயலை அடையாளப்படுத்தக்கூட பெண்ணை இழிவுபடுத்தும் வார்த்தைதான் முன் வருகிறது என்றால் இக்கேடுகெட்ட சமூகத்தின் கசடு ஒட்டிக் கொண்டிருக்கிறது என்று தானே அர்த்தம்? விபச்சாரம் என்பது தொழில், அதில் ஈடுபடும் ஆண்களுக்கு ஒரு உதாரணத்திற்கு "விபச்சாரகன்" என்ற பதத்தை உருவாக்கி அடிக்குறிப்பு எழுதியிருந்தால்கூட ஒன்றுமில்லையே?!

எனவே, மா.அ.க., தலைமையிடம் நிலபிரபுத்துவ ஆணாதிக்க மிச்ச சொச்சங்கள் ஒட்டிக் கொண்டிருப்பது தெளிவு. இவற்றை மாற்றுவதற்கு - களைவதற்கு அணிகள் போராட வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இயங்கியல் பொருள்முதல்வாத கண்ணோட்டத்தில் பெண் விடுதலைக்கான கோட்பாடுகளை உருவாக்குவோம்!



பதிப்பு : ஆகஸ்டு '96

விலை ரூ: 3/-

நூல் கிடைக்குமிடம்

**பஃறுளி பதிப்பகம்**

183, வெங்கடரங்கம் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 5.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்